கிடைக்க பேச்சுவார்த்தை நடத்தியவர். இதை நிறை வேற்றித் தருகிறேன் என்று விடுதலைப் புலிகளுக் கும், இலங்கை இராணுவத்திற்கும் உச்சகட்டப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இலங்கை சென்ற பிரணாப் முகர்ஜியிடம் உறுதியளித்தார் ராஜ பக்ஸே. அந்த உறுதிமொழியின்படி சமீபத்தில் இந் தியாவிற்கு வந்த இலங்கை அதிபர் ராஜபக்ஸேயி டம் பேசி '13வது அரசியல் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவேன்' என்ற உறுதிமொழியைப் பெற்ற வர் பிரணாப் முகர்ஜிதான். இலங்கைத் தமிழர் பிரச்சி னையில் முக்கிய பங்கு வகித்த சிதம்பரமும், பிரணாப் முகர்ஜியும் இந்த விதத்தில்தான் உலகத் தமிழ்ச் செம் மொழி மாநாட்டில் பங்கேற்கிறார்கள்" என்று தமிழ் மாநாடு பற்றிய 'தந்திர' திட்டத்தைக் கசியவிட்டார்.

இப்படி 'தமிழினத் தலைவர்' 'கூட்டணித் தலைவர்' என்ற அந்தஸ்தை இந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் விளைவாக பெற்ற முதல்வர் கருணா நிதி, அடுத்து என்ன செய்யப் போகிறார் என்பதே இன்று அனைவர் முன்பும் உள்ள கேள்வி. அவரைப் பொறுத்தமட்டில் சட்டமன்றத் தேர்தலை முன்கூட் டியே நடத்துவார் என்று பரபரப்பாகப் பேசப்படுகி றது. தேர்தல் கமிஷனர்களில் ஒருவரான சம்பத்கூட சமீபத்தில் 'எந்த நேரத்திலும் தேர்தல் நடத்தத் தயார்' என்று பத்திரிகையாளர்கள் சந்திப்பில் அறிவித் துள்ளார். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருக்கும் நரேஷ்குப்தா வருகின்ற ஜூலை 31ஆம் தேதியோடு ஓய்வு பெறுகிறார். அதற்குப் பிறகு தேர் தல் அதிகாரியாக தமிழகத்தில் யாரை நியமிக்கிறார் கள் என்பது 'முன்கூட்டியே தேர்தல்' என்ற முடிவிற்கு முன்னோட்டமாக இருக்கும்.

நம்மிடம் பேசிய தி.மு.க. வட்டாரம், "இப்போ தைக்கு தேர்தலை முன் கூட்டியே நடத்தும் திட் டம் ஏதும் தலைவர் கலைஞரின் மனதில் இருப்பதா கத் தெரியவில்லை. அண்ணா, எம்.ஜி.ஆர்., ஜெயல லிதா ஆகியோர் முதல்வர்களாக இருந்த போது உல கத் தமிழ் மாநாடு நடைபெற்றுள்ளது. ஆகவே தான் முதல்வராக இருக்கும் போது உலகத் தமிழ் மாநாடு நடத்த வேண்டும் என்பது அவரது ஆசை. சோனியா காந்தி தமிழை செம்மொழி என்று அறிவிக்க உறுது ணையாக இருந்துள்ள நிலையில், இந்த மாநாட்டை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்றே அறிவித் துவிட்டார் கலைஞர். இதுவரை காங்கிரஸ், தி.மு.க. கூட்டணியில் உறுதியாக இருக்கிறது. அதே நேரத் தில் காங்கிரஸூம் அதிக சீட்டுகள் வாங்க வேண்டும் என்பதில் அக் கறை காட்டு கிறது. தமிழ கத்தில் நிலவும் மின் வெட்டுப் பிரச்சினை பற் றிய பிரச்சா ரம் இந்த உல கத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டால் 'டைவர்ட்' ஆகி யிருந்தாலும், அந்தப் பிரச்சி னையைத் தீர்க் காமல் தேர் தலை நடத்து வது சரியாக இருக்காது என்றே முன்ன ணித் தலைவர் கள் பலரும் கரு துகிறார்கள். இது தவிர அழ கிரி- ஸ்டாலின் பிரச்சினை இப்போதுதான் கொஞ் சம் குறையத் தொடங்கியுள்ளது. இந்த சுமூக நிலை இன்னும் சில மாதங்களுக்கு நீடித்த பிறகு தேர்தலைச் சந்திக்கலாம் என்ற எண்ணமே கட்சியில் நிலவுகி றது.



ஆனாலும் கலைஞரைப் பொறுத்தமட்டில் ஓர் முடிவை எடுக்கும் முன்பு பல்வேறு பிரச்சினைகளை அலசி ஆராய்வார். ஆகவே காங்கிரஸை 'கன்ஸல்ட்' செய்யாமல், முன்கூட்டியே தேர்தல் என்ற முடிவை அறிவிக்க மாட்டார். மற்றபடி இந்த மாநாட்டின் மூலம் கிடைத்த மைலேஜ் என்ன என்பதையும் உள வுத்துறை மூலம் தனியாக விசாரித்து அறிக்கை தரு மாறு உத்தரவிட்டிருக்கிறார் முதல்வர்" என்றார். ▲